# மெட்ரோ ரயில் பணி ஏலத்தில் 3 நிறுவனங்கள் ஆர்வம்

**சென்னை, நவ.15:** இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தின் முக்கியப் பிரிவுகளில் ஒன்றான பூந்தமல்லி புறவழிச்சாலையில் (பைபாசில்) இருந்து போரூர் சந்திப்பு வரை உயர்த்தப்பட்ட பாதை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள மூன்று நிறுவனங்கள் ஏலத்தில் ஆர்வமாக பங்கேற்றுள்ளன.

**மெட்ரோ ரயில் திட்டம்:** சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் விதமாக, முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டம் நிறைவடைந்து, விமான நிலையம்- வண்ணாரப்பேட்டை வரை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல்-பரங்கிமலை வரை இரண்டாவது வழித்தடத்திலும் ரயில் சேவை தொடங்கியது.

இதையடுத்து, இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் அறிவிக்கப்பட்டது. அதன்படி, மாதவரம்-சிப்காட், மாதவரம்-சோழிங்கநல்லூர், கலங்கரை விளக்கம்-பூந்தமல்லி ஆகிய 3 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இந்த வழித்தடத்தில் மொத்தம் 118.9 கி.மீ. தொலைவுக்கு ரூ.69 ஆயிரம் கோடி மதிப்பில் திட்டப்பணிகள் நடைபெறவுள்ளன. 128 ரயில் நிலையங்கள்

அமைக்கப்படவுள்ளன. இதில், 52 கிலோ மீட்டர் தூரத்துக்கான பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் தொடங்கி, வரும் 2024-25-ஆம் ஆண்டுக்குள் முடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இரண்டாம் கட்ட

**பூந்தமல்லி – போரூர் வழித்தடம்**


(கோப்பு படம்)

மெட்ரோ திட்டத்தில் முக்கிய பிரிவுகளில் ஒன்றான பூந்தமல்லி புறவழிச்சாலையில் (பைபாசில்) இருந்து போரூர் சந்திப்பு வரை உயர்த்தப்பட்டபாதையில் பணிகள் மேற்கொள்ள மூன்று நிறுவனங்கள் ஏலத்தில் ஆர்வமாக பங்கேற்றுள்ளன. அதாவது, இந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்- கேஇசி சர்வதேச கூட்டு நிறுவனம், லார்சன் அண்டு டியூப்ரோ மற்றும் என்சிசி நிறுவனம் ஆகிய மூன்று நிறுவனங்கள், உயர்த்தப்பட்ட பாதையில் கட்டுமான பணிகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.

பூந்தமல்லி புறவழிச்சாலை முதல் போரூர் சந்திப்பு வழித்தடத்தில் பூந்தமல்லி புறவழிச்சாலை (பைபாஸ்), பூந்தமல்லி பேருந்து முனையம், முல்லை தோட்டம், கரையான் சாவடி, குமனன் சாவடி, காட்டுப்பாக்கம், ஐயப்பந்தாங்கல்பேருந்துடிப்போ,சென்னை பைபாஸ் ஆகிய ரயில் நிலையங்கள் அமையவுள்ளன. இதுதவிர, இந்த மூன்று நிறுவனங்கள் போரூர் சந்திப்பில் இருந்து பவர்ஹவுஸ் வரை பாதைகள் அமைக்க ஏலம் கேட்டு இருந்தன.

**முன்னுரிமை வழித்தடம்:** இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: இந்த இரண்டு பாதைகளும் முன்னுரிமை வழித்தடத்தின் கீழ் வரவில்லை. ஆனாலும் இந்த ஆண்டு இறுதிக்குள் பெரும்பாலான சிவில் டெண்டர்களையும் விட்டு, அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஒப்பந்தங்களை வழங்க திட்டமிட்டுள்ளனர். அதன்பிறகு, ஒரேநேரத்தில் நகரம் முழுவதும் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட வாய்ப்பு உள்ளது.

மாதவரம் முதல் கோயம்பேடு வரையிலும், மாதவரம் முதல் தரமணி வரையிலும் முன்னுரிமை வழித்தடமாக உள்ளது. இதற்கான நிதி முதலில் இறுதிசெய்யப்பட்டு, டெண்டர்கள் விடப்பட்டுள்ளன. சுரங்க நிலையங்களுடம் ஒப்பிடும்போது, உயர்த்தப்பட்டபாதையில் நிலையங்களை கட்டி எழுப்புவது எளிதாக இருக்காது. ஏனெனில், பல நெரிசலான பகுதிகள் இருப்பதால் பாதை அமைக்கும் பணிகளை எளிதாக மேற்கொள்ள முடியாது. இந்த பாதையின் கட்டுமான பணிகளை 3 ஆண்டுகளில் முடிக்க திட்டமிட்டுள்ளோம். பெரும்பாலும் விரிவான வடிவமைப்புகள் நிறைவடையும் நிலையில் உள்ளன என்றார் அவர்.